நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்ற
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் ஆறு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 13 பிரசோற்பத்தி பங்குனி 06 (19.03.1992) வியாழன்

## மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் வரவில்லை

பாடசாலை மாணவர்களுக்கு டிசம்பர் - ஜனவரி மாத உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் பல கூட்டுறவுச்சங்கங்களுக்கு அதற்கான உணவுப்பொருள்கள் வரவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. இதே நேரம் காங்கேசன்துறை, பருத்தித்துறை ஊடாக பெருமளவு உணவுப்பொருள்கள் களஞ்சியங்களுக்கு வந்து சேருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலைந்து திரிகின்றதையும் காண முடிகிறது

# மணலாறில் தொடர்ந்தும் மோதல்
# படையினர் தரப்பில் பலத்த சேதம்

## 'ஒபரேஷன்ஹயபார'வில் 40சிப்பாய்கள் பலி

மணலாறு கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் மோதல்களில் படையினரின் மேலும் மூன்று கவச வாகனங்கள் தகர்த்தெறியப்பட்டன, படையினருக்கு உதவ விமானப் படையும் கடற்படையும் கடும் தாக்குதலை நடத்திய போதிலும் புலிகள் சளைக்காது தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றனர்.

ஒபரேஷன் ஹயபார என்று படையினரால் பெயரிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் இதுவரை 40 படையினர் பலியாகியுள்ளதாக வவுனியாவிற்கு கிடைத்த செய்திகள் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி இராணுவ முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறிய படையினர் மீது முகாமிற்கு மிக அருகில் வைத்தே புலிகள் தாக்குதலை நடத்தினர்.

மணலாறு மோதலில் இதுவரை 13 போராளிகள் வீரச்சாவு எய்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தாக்குதலில் படையினரிடமிருந்து இரு நவீன துப்பாக்கிகள் 50 கலிபர் ரவைகள் - 70, ஐ எம் ரவைகள் - 350, புகைக்குண்டு என்பவற்றை புலிகள் கைப்பற்றினர்.

## இராணுவ உயரதிகாரிகள் மணலாறுக்கு விரைவு

நேற்று முன்தினம் மணலாறு கொக்குத்தொடுவாயில் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம், பொருள்சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நேற்று அப்பகுதிக்கு இராணுவ உயரதிகாரிகள் விரைந்தனர்.

நேற்றுக்காலை மணலாறு சென்ற இந்த இராணுவ உயரதிகாரிகள் குழுவில் இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன வடபகுதித் தளபதி டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் அடங்கியிருந்தனர்,

இதனிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 28 படையினர் கொல்லப்பட்டதாகவும் 15 படையினர் காயமடைந்ததாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது

இதேவேளை மணலாறில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோதலில் 80 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## காத்தான்குடி பஸ் மீது கைக்குண்டு வீச்சு; மூவர் பலி

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று பஸ் வண்டி மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில் பஸ்ஸில் இருந்த மூவர் பலியாகினர். 11 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 6 45 மணியளவில் காத்தான்குடியில் பயணம் செய்துகொண்டிருந்த இந்த பஸ்ஸை இருவர் வழிமறித்ததாகவும் ஒருவர் பஸ்ஸினுள் ஏறி கைக்குண்டை எறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வல்வை. நோக்கி ஷெல் வீச்சு ஒரே குடும்பத்தில் மூவர் காயம்

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினமிரவு 10 மணிக்கு ஏவப்பட்ட ஷெல்லுக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்தும், கடலிலிருந்து கடற்படைத் தாக்குதலும் ஒரு மணிநேரம் வல்வெட்டித்துறை நோக்கி நடத்தப்பட்டது

ஆட்லறி ஷெல் தாக்குதலில் வேவில் பிள்ளையார் கோவிலில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு நாகலிங்கம்-சதாசிவம் (42), சதாசிவம்-ஜீவராசா (10), சதாசிவம்-பிரபாகரன் (02) ஆகியோரே காயமடைந்த நிலையில் மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (10 09 08)

## தமிழகத்திலுள்ள அகதிமுகாம்களுக்கு வெளியே வசிப்பவர்களும் அனுப்பப்படுவர்

தமிழகத்தில் அகதிமுகாம்களுக்கு வெளியே உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளையும் திருப்பியனுப்ப தமிழக அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இவ்வாறு இலங்கைக்கு அனுப்பப்படும் இவர்கள் இலவசமாகவே அனுப்பப்படுவர் எனவும் இதன் பொருட்டு அகதி முகாமிற்கு வெளியே வசிப்பவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் மாவட்ட ஆட்சி அலுவலகத்தில் தம்மைப் பதிவு செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை திரும்ப விரும்புவோர் இதற்கான விண்ணப்பத்தைப் பெற்று தமது சம்மதத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம். எனவும் தெரிவிக்கப்படுகிறது

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா அரசு சம்மதித்துள்ளதினாலேயே இந்த நடவடிக்கையை துரிதப்படுத்தியுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது

## வவுனியாவிலிருந்து விமானங்கள் தாக்குதலுக்குச் செல்கின்றன

வவுனியா விமான நிலையத்திலிருந்து குண்டு வீச்சு விமானங்கள் மணலாறு நோக்கி மாறி மாறிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

மணலாறு பகுதியில் நடைபெறும் குண்டு வீச்சுத் தாக்குதலின் ஒலி புளியங்குளம் வரை கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை முகாம்களிலிருந்து ஷெல் வீச்சுகள் நடைபெற்றன (07)

## ★ சட்டப்பேரவையில் ஜெயலலிதா
## இலங்கைத் தமிழருக்காக தமிழகத்தவரை பலியிட முடியாது

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக நேற்றுத் தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் பொது மேடைகளில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுகிறார் இயலுமானால் கைதுசெய்யுமாறு சவால் விடுகிறாரே என ஜெயலலிதா குறிப்பிட்டார்

இதற்குப் பதிலளிக்க பண்ருட்டி இராமசந்திரன் முற்பட்டபோது மீண்டும் ஜெயலலிதா குறுக்கிட்டு பிரபாகரனையும் புலிகள் அமைப்பையும் ஆதரிக்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பினார்

—06 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் கல்விப்பணிப்பாளர் இன்று கொழும்பு பயணம்

யாழ் கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் இன்று கொழும்பு பயணமாகிறார் என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

க. பொ. த உயர்தரப் பரீட்சையை திட்டமிட்டபடி வடக்கில் நடத்துவது குறித்து அவர் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்.

பணிப்பாளர் யாழ் திரும்பும் போது க. பொ. த வினாத்தாள்களையும் எடுத்து வருவார் எனவும் அவ்வட்டாரங் தெரிவித்தன. (06)

## ★ சட்டப்பேரவையில் சம்பவம்
## ஜெயலலிதாவுக்கு தி.மு.க. உறுப்பினர் பதிலடி

கடந்த ஆண்டு 1989 இல் தமிழகத்தில் நடைபெற்ற தேர்தலில் தி மு க. அரசு தற்செயலாக ஆட்சி அமைத்தது மதுவிலக்கை முறையாக கடைப்பிடிக்கவில்லை என நேற்று தமிழக சட்டப் பேரவையில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

முதலமைச்சரின் இந்த உரையைத் தனக்குச் சாதகமாக்கிய தி மு க உறுப்பினர் பரிதி இளம்வழுதி ஒவ்வொருவரும் அரசியல் வியத்து மூலமே ஆட்சிக்கு வருகின்றனர் என்றார். இதனால் சபையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது

## ● சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் கவலை
## பிரபாகரனுக்கு ஆதரவு கோஷம் ஜெயலலிதாவுக்கு ஏளனகோஷம்

அண்மையில் சேலத்தில் நடைபெற்ற ஓர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு ஆதரவாக கோஷங்கள் எழுப்பப்பட்டன தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும், ராஜீவ் காந்திக்கும் எதிராக எழுப்பப்பட்டன.

இப்படி குற்றஞ்சாட்டினார் தமிழக சட்டப் பேரவைத் தலைவரும் காங்கிரஸ் உறுப்பினருமான எஸ், ஆர். பாலசுப்பிரமணியன்

நேற்று தமிழக சட்டப் பேரவையில் உரையாற்றிய அவர், செங்கை-எம் ஜி ஆர், மாவட்டத்தில சிறை அதிகாரி ஒருவர் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறார் என்

— 06 ஆம் பக்கம் பார்க்க

● மகாமக விபரீதம்; எடுபடாத மரண ஓலங்கள்

# பக்தர் பலரின் உயிர் பறித்த ஜெயலலிதா கையசைப்பு

கும்பகோணம் மகாமகத்தன்று ஏற்பட்ட பெரும் விபரீதம் குறித்து "ஜூனியர் விகடன்" தனது நிருபர்களின் நேரடி றிப்போட்டை முழுமையாக தத்ரூபமாக, அச்சொட்டாக வெளியிட்டுள்ளது, அதனை இங்கு தருகிறோம்,

தாமதமாகவே துவங்கப்பட்ட பராமரிப்பு வேலைகள் அரசுத்துறைகளின் மெத்தனம், ஆகம விதிகள் மீறப்பட்டதாக எழுந்த புகார் என்று பல்வேறு சர்ச்சைகளோடு இம்முறை கும்பகோண 'மகாமக நாள்' நெருங்கியது தமிழக முதல்வர் ஜெயலலிதா மகாமகக் குளத்துக்கு வந்து நீராடப்போகிறார் என்கிற செய்தி மேலும் பரபரப்பை உண்டாக்கியது கட்டுக்கடங்காத கூட்டத்தில் கும்பகோணம் சென்று பத்திரமாகத் திரும்புகிற பயம் லட்சக்கணக்கான பக்தர்களிடையே இருந்தது முதல்வரின் நேரடி "விசிட்". அதனால் ஏற்படப்போகும் பாதுகாப்புக் கெடுபிடிகள், பக்தர்களை மேலும் பயமுறுத்திக் கொண்டுதானிருந்தன

### பக்தர் திகில்

பக்தர்களின் பயத்தை உறுதி செய்வதுபோல் மகாமகத்துக்கு முதல் நாளான 17-ம் தேதியே நிகழ்ச்சிகள் நடக்க ஆரம்பித்தன, முதல்வர் வந்து நீராடிவிட்டுப் போகும்வரை பக்தர்கள் குளத்தில் இறங்க அனுமதியில்லை என்று 17-ம் தேதி பொலிஸ் செய்த அறிவிப்பு பக்தர்களைத் திகிலடையச் செய்தது. இந்த அறிவிப்பை பொலிஸ் கடைப்பிடித்திருந்தால் மகாமகக் குளத்தருகே சுமார் எட்டு லட்சம் பேர் கூடியிருப்பார்கள்

பொலிஸ் கட்டுப்படுத்த முடியாமல் திணறியிருக்கும் மரண எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்திருக்கும் பொலிஸ் அறிவிப்பை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தது விஸ்வ இந்து பரிஷத் மற்றும் பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்கள், பொலிஸ் அறிவிப்பை மீறி பாரதிய ஜனதா கட்சியினர் முதல்நாளே குளத்தில் நங்க ஆரம்பித்தனர் அதனால்முதல்வர் வருகைக்கு முன்பே பல்லாயிரம் பேர் நீராடிவிட்டுக் கிளம்பினார்கள்

### காட்சி காண...

மகாமகத்தன்று காலை எட்டரை மணிக்குக் குளத்தில் மிதமான பக்தர்கள் கூட்டம் இருந்தது. அந்த நேரத்தில் காவல்துறையினர் கூட்டத்தை ஓரளவு கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர் இந்த ஒழுங்கு முறை காலை ஒன்பதரை மணிவரை நீடித்தது ஒன்பதரை மணிக்குமேல் மக்கள் கூட்டம் குளத்திலிருந்து வெளியேறாமல் அங்கேயே நின்றது. காலை 10 40க்கு குளத்தில் நின்ற கூட்டம் அப்படியே நகராமல் முதல்வர் ஜெயலலிதா நீராடப்போகும் காட்சியைக் காணவேண்டி அதற்கென அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேகமான குளியல் அறைப் பகுதியை நோக்கி நகர்ந்து அந்தப் பகுதியிலேயே நின்றது

### தேவாரம் தவிப்பு

குளத்தின் கொள்ளளவு நாற்பதாயிரம் பேர் தான் என்று கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் அதைவிடப் பலமடங்கு கூட்டம் குளத்தில் நின்றது குளத்தின் கால்பகுதிக்குமேல் முதல்வரின் பாதுகாப்பும் கருதிக் காவல்துறை வளைத்துக் கொண்டு நின்றது இதனால் நேரம் ஆகஆக குளத்தின் உள்ளே மக்கள் நெருக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. முதல்வர் நீராடும் இடத்தை நோக்கி நெருக்கியடித்தபடி நகர்ந்தது மக்கள் கூட்டம்... முதல்வர் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே வந்த தேவாரம் ஐ ஜி..... அடிக்கடி பைனாகுலர் மூலம் மக்கள் அவதிப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார், ஆனால் குளத்துக்குக் கூட்டம் வருவதைத் தடுக்க முடியாமல் தவித்தார்,

### கையசைப்பு

சரியாகக் காலை மணி 11. 32க்குத் தனக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த குளியல் அறைப் பகுதிக்கு வந்த முதல்வர், படிக்கட்டில் நின்று மக்களைப் பார்த்துக் கையை அசைத்தார், அவருக்கு நேர் எதிர்ப்புறம் வடக்குவீதிப் பக்கம் நின்ற கூட்டத்தினர் முதல்வரைக் காண முடியாமல் குளக்கரையில் இருந்த கோயில் ஒன்று மறைத்தது. எனவே அந்தப் பகுதியில் இருந்தவர்கள் முண்டியடித் கொண்டு முன்னுக்கு வந்து 'மாங்கூர் தர்மசாலா' கட்டிடத்தின் வெளிப்புறம் இருந்த இரும்பு வைத்த கடைச்சுவர் மீது ஏற முயல, அதைத் தொடர்ந்துதான் இரும்பு இரில் சுவரோடு சாய்ந்தது அங்கேயே சிலர் நசுங்கி இறந்தனர்

### திக்குத்தெரியாத ஓட்டம்

பொதுமக்கள் மத்தியில் கிரில் விழுந்தபோது, அந்தப் பகுதி மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாலாபுறமும் திக்குத் தெரியாமல் ஓடினார்கள்! அதனால் குளத்திலிருந்து கரையேறிய மக்களும், சிதறி ஓடிய மக்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர், அப்போது வீதிகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட நெருக்கடியில் ஆண்களும் பெண்களுமாகப் பல உயிர்கள் பலியாகின.

### எடுபடாத மரணஓலம்

பொலிஸ்தரப்பில் பலியானது நாற்பத்தெட்டுப் பேர்' என்று புள்ளிவிவரம் கொடுத்தாலும். இன்னும் பல உயிர்கள் பலியாகியிருக்கும் என்று உறுதியாக நம்பலாம்! அந்த அளவுக்குக் களேபரம், கூக்குரல்கள், துயரச்சம்பவங்கள் முதல்வர் நீராடிக்கொண்டிருக்கும் இடத்துக்குச் சில நூறு அடிகள் தள்ளிநடந்தன. நிகழ்ச்சியை வர்ணித்துக் கொண்டிருந்தவர்களின் மைக் ஒலி, கூட்டத்தின் இரைச்சல் - இவற்றுக்கு நடுவே மனித உயிர்களின் மரண ஓலங்கள் எடுபடாமல் போயின.

### சைரன்

"முதல்வர் மதியம் இரண்டரை மணிக்கு மேல்தான் கும்பகோணத்திலிருந்து கிளம்பினார், அதுவரையில் அவருக்கு சம்பவம் நடந்த விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு வந்திருப்பாரே..." என்கிறார்கள் ஊர்மக்கள். இறந்தவர்களின் உடல்களை மருத்துவ சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் குடந்தை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மதியம் இரண்டு மணியிலிருந்து நகரில் தொடர்ந்து அம்புலன்ஸ் 'சைரன்' பரபரப்பாக ஒலித்துக்கொண்டே இருந்தது. மருத்துவமனையின் புதிய கட்டிடமான அவசர மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவில் அவசர கேஸ்களும் இறந்தவர்களின் உடல்களும் சரிசமமாக வந்து குவிந்து கொண்டிருந்தன.

### காட்டுத்தீபோல்......

ஊரில் இந்தச் சம்பவம் காட்டுத்தீ போல பரவ ஆரம்பித்ததும்... பொதுமக்கள் இறந்தவர்களில் தங்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் யாரும் இருக்கக்கூடாது என்று மருத்துவமனைக்கு அருகில் உள்ள கோயில்களில் வேண்டிக்கொண்டு பிணங்களை அடையாளம் காட்டுவதற்காக ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்து தகத்துடன் குழுமியிருந்தார்கள். இறந்து போனவர்களுக்கு உதவுவதற்காக அவர்களுக்கு ஆறுதல் மொழிகள் சொல்லித் தேற்றிக் கொண்டிருந்த நிருபர்களை பொலிஸ்காரர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேற்றியதோடு. "நீங்க உள்ளுக்குள்ள நுழைஞ்சா பிரச்சனை பெரிசாயிடும்!" என்று மிரட்டினார்கள்,

குடந்தை மருத்துவமனையில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு கடந்த 18. 10 91 அன்றுதான் தொடங்கப்பட்டதாம்! அந்தக் கட்டிடம் திறக்கப்பட்ட பிறகு நடந்திருக்கும் பெரிய விபத்து இதுதான்! "பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமக விழா தொடர்ந்து நடந்திருக்கிறது இதுவரையிலும் எந்தமகாமக விழாவிலும் இப்படி ஒருதுயர சம்பவம்நடந்ததே இல்லை ...என்றார்கள் ஊர்மக்கள்!

### 25 பவுண் நகை

பிணங்களை அடையாளம் காட்டி உடல்களைப் பெற்றுச் செல்வதற்காக மருத்துவமனைக்கு வந்திருந்த பலர் பிணத்தை அடையாளம் காட்டிய பிறகும் அவற்றைப் பெற்றுக்கொள்ள மறுத்தார்கள் அவர்களில் ஒருவரிடம் காரணம் கேட்ட போது இறந்துபோனது எங்க அம்மா தான் அவங்க மகாமகக் குளத்துக்கு போறேன்னு கிளம்பினப்ப இட்டிருந்த 25பவுணுக்கு மேல நகைகள் போட்டுப போனாங்க! அவங்க மூச்சுத்திணறி மயக்கமா இருக்காங்கன் சொல்லி ஆஸ்பத்திரில சேர்க்கிற வரைக்கும் கூட எல்லா நகைகளும் சரியாத்தான் இருந்திச்சு அதுக்கப்புறம் அவங்க இறந்துட்டாங்கன்னு சொல்லி பிணத்தோட பிணமா கிடத்தினாங்க அப்புறம் நாங்க போயி பாத்த எங்க அம்மா உடம்புல ஒரு குண்டு நகைகூட இல்லை. கேட்டா அந்தம்மாவே போயிடுச்சு... நகையா முக்கியம்ங்க றாங்க ஆனா பிணத்தோட நகைகளையும் பெற்றுக் கொண்டோம், னு எழுதிக் கையெழுத்து போடச் சொல்றாங்க" என்றார் அழுதபடியே; பல குடும்பத்தினர் இதேபோல எம்மிடம் சொன்னார்கள்.

### இளைஞர் அதிர்ச்சி

தேவகோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை இரண்டு பொலிஸ்காரர்கள் கையைப் பிடித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துவந்து "இங்க பாரு...உன்னோட அப்பாவும் அம்மாவும் இறந்து போயிட்டாங்க! இப்ப அழுவதற்கெல்லாம் நேரமில்லை. என்னா தேவக்கோட்டைக்கு ஏற்கனவே ஒரு பாடிய ஏத்தி அம்புலன்ஸ புறப்படத் தயாரா நிக்குது! உங்க அப்பாவையும் அம்மாவையும் வண்டில ஏத்திறலாம்இல்லையா." என்று கேட்டதும் அந்த இளைஞர் அதிர்ந்து போய்க் கதறி அழுத காட்சி நெஞ்சை உலுக்கியது.

இந்தத் துயரக்காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அரசுத் தரப்பிலிருந்து பல முரண்பட்ட செய்திகள்...

### மிதிபட்ட பெண்

நிருபர்கள்கண்முன்னாலேயே வயதான பெண்மணி ஒருவர் கூட்டத்தில் மிதிபட்டுக் கொண்டிருந்தார், அவரைக் காப்பாற்ற முற்பட்டபோது பொலிஸ்காரர் பலவந்தமாக இடத்தைவிட்டு அப்புறப் படுத்தப்பட்டோம்! பிறகு அந்தப் பெண்மணி மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இறந்து போனார். கூட்ட நெரிசலில் பலரது ஆடைகள் கிழிபட்டன நகைகள் பறிபோயின! பணம் ஏராளமாகப் பறிபோனது! பலர் அரை நிர்வாணமாக பொலிசாரின் கெடுபிடிகளால் கூட்டத்தில் மூச்சு விடக்கூட முடியாமல் முன்னேறினார்கள்.

### வேஷ்டி; புடவை, செருப்புகள்

அப்போது பொதுமக்கள் இழந்த பொருள்களின் மதிப்பு மட்டும் பல லட்ச ரூபாய் இருக்கும்!

கூட்டம் குறைந்த பிறகு இரவு ஒருமுறை அந்தப் பகுதியை வலம் வந்தபோது ரோட்டில்ஏராளமான சட்டைகள், வேஷ்டிகள், புடவைகள், செருப்புகள்...

முரண்பாடான செய்திகள் கேட்டு, மன்னார்குடியில் இருந்து இறந்தவரின் விவரம் அறிய வந்த பொலிசாரின் கெடுபிடிகளால் திக்குத் தெரியாமல் நின்றிருந்த ஒரு குடும்பத்துக்கு உதவி செய்வதற்காக ஐ. ஜி தேவாரம் தங்கியிருந்த இடத்துக்கு நாம்சென்றோம்,

தேவாரத்தையெல்லாம் இப்ப பாக்க முடியாது அப்படியே பார்த்தாலும் அவரு உங்கிட்டே பேசமாட்டாரு போதுமா?!" என்று நம்மை உள்ளுக்குள் விடாமல் திருப்பி அனுப்பி வைத்தார்,பொலிஸ் உயரதிகாரி கோவிந்தராஜு

நன்றி: ஜூனியர் விகடன்

## மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை திருநாக்கரை மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி சைவப்புலவர் நா. க தங்கரத்தினம் தலைமையில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.க மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## பாடசாலைகளில் தமிழீழ வரைபடம்

யாழ் பாடசாலை மாணவர்கள் அறிந்துகொள்வதற்காக தமிழீழ தாயக வரைபடம் இன்று பாடசாலைகளில திறந்துவைக்கப்படவுள்ளது,

இதேபோல ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கும் இவ்வரைபடம் பாடசாலைகளில் திறந்து வைக்கப்படவுள்ளன.

18-07

## 3500 ரூபா அபராதம்

மாத்தளையில 40 இராம் குறைந்த பாண் தயாரித்த பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு மாத்தளை நீதவான் 3500 ரூபா அபராதம் விதித்தார்,

## அன்னை பூபதி அஞ்சலிக் கூட்டம்

நாளை வெள்ளிக்கிழமை சங்கானை வட்டவைப் பிரதேசத்தில் அன்னை பூபதி நினைவாக காலை 8-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரை அடையாள உண்ணாவிரதமும் மாலை 7-00 மணிக்கு பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவிலடியில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்,


## சிறு விளம்பரம்

**தேவை**

Audit Traineers

க. பொ. த, உயர்தரப் பரீட்சையில் கணக்கியல், வர்த்தகம் ஆகியவற்றில் திறமைச் சித்தி பெற்றோர் விண்ணப்பிக்கலாம். ASS (J) Ltd. 140, பலாலி வீதி, திருநெல்வேலி, 03037

**தேவை**

கணக்கியல், கணக்காய்வுத்துறையில் அனுபவம் உடையோர் தேவை ASS (J) Ltd, 140, பலாலி வீதி, திருநெல்வேலி. 03039



முதுபெருங்கலைஞர்களான நாதஸ்வர மேதைகள்

**மாவிட்டபுரம் எஸ். கே. இராசா**

**யாழ்ப்பாணம் பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை**

ஆகியோரின்

## ★ பாராட்டு விழா ★

கடந்த 1992 மார்ச் மாதம் 7-ம் திகதி நடைபெற்ற மேற்படி பாராட்டுவிழாத் தொடர்பாக உதவிபுரிந்த கலைஞர்களுக்கும், ஆசியுரை, சிறப்புரை, தலைமையுரை ஆகியன வழங்கிய பெரியார்களுக்கும், பாராட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும், மண்டப அலங்காரம், ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும், வீடியோ, நிழற் படப்பிடிப்பாளர்களுக்கும், மண்டப உரிமையாளர்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும், சுவைஞர் பெருமக்களுக்கும், பத்திரிகை நிறுவனங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

03036 -- விழா அமைப்பாளர்கள்

# பிரதேச செயலக முறையை வடக்கில் செயற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்; தெற்கிலும் வெற்றியளிக்கவில்லை

(கிறிஸ்ரி ரஞ்சன்)

மாவட்டக் கச்சேரிகளின் வேலைப்பழுவைப் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்து வழங்கி அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசின் புதிய திட்டம் தெற்கில் முழுமையாக வெற்றியைத் தர வில்லை என அங்கிருந்து கிடைக்கும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தை முழுமையாக அமுலாக்கிப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு சிறிது காலமெடுக்கு மென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவட்டக் கச்சேரிகள் செய்து வரும் வேலைகளைப் பிரதேச செயலகங்கள் மேற்கொள்ள ஆரம்பிப்பதற்கு உத்தேச திட்டத்தின் படி முதற் கட்டத்தில் ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களும் குறைந்தது 58 ஊழியர்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

அவர்களில் எழுவர் கணக்குப்பிரிவின் வேலைகளைக் கையாளக் கூடிய பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டியதும் இங்கு முக்கியமானதாகும்.

## வட பகுதியில் சாத்தியமில்லை

ஆனால் வடபகுதியைப் பொறுத்தவரையில் போதியளவு புதிய நியமனங்கள் செய்யப்பட்டாலன்றி இந்த ஆரம்ப இலக்கை அடைவதே பெரும் சிரமத்திற்குரியதாகவே இருக்குமெனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## அறிவுறுத்தல் இன்னமுமில்லை

அத்துடன் இந்த அதிகாரப் பரவலாக்கலுக்கான போதிய அறிவுறுத்தலோ, நிதி ஒதுக்கீடோ இன்னமும் இங்கு வந்து சேரவில்லையென யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஊழியர் நலன் மட்டுமே முதலில்

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை அந்தந்த அலுவலகங்களிலேயே தயாரித்து வழங்கக் கூடிய வகையிலான பன்முகப்படுத்தல் மட்டுமே இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அடுத்ததாகக் காணி சம்பந்தப்பட்ட வேலைகளைப் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரும் கட்டத்தில் தற்பொழுது கச்சேரியில் கடமைபுரியும் முதலாம் தர சிரேஷ்ட ஊழியர்கள் மாகாண சபை மற்றும் திணைக்களத் தலைமை அலுவலகங்களுக்கு மாற்றப்படுவார்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பலகட்டிடங்களில் இயங்கவேண்டும்

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இடவசதி, தளபாட வசதி என்பன குறைவாகவே யுள்ளதனால் உத்தேச பிரதேச செயலகங்களின் முழு நடவடிக்கைகளும் இங்கு ஒரே கூரையின் கீழ் மேற்கொள்ளப் படுவது சாத்தியப்படாது எனவும் அப்பிரிவிலுள்ள பல கட்டிடங்களில் அவை இயங்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இவ்வாறிருக்க மாவட்டக் கச்சேரிகளின் பொறுப்புக்களைப் பிரதேசச் செயலகங்களுக்கு ஒப்படைப்பதை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்பது குறித்து ஆராயக் குழுவொன்று இப்பொழுது கொழும்பில் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு மூன்று மாத காலத்துக்குள் தனது சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கும்.

## சுற்றறிக்கை இனியேவரும்

இந்த அறிக்கையில் எந்தெந்தப் பொறுப்புக்களை என்னென்ன வகையில் பகிர்ந்து வழங்க முடியும் என்பது குறித்த சிபார்சுகள் தெரிவிக்கப்படுமெனவும், அதனை அடிப்படையாகக் கொண்டே இது விடயத்தில் நடைமுறைப் படுத்த வேண்டிய விடயங்களைப் பொது நிருவாக மாகாணசபைகள் அமைச்சு சுற்று நிருப மூலம் அறிவிக்குமெனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# கொழும்பில் நட்வர்சிங்; காரணம் தெரியவரவில்லை!

இந்திரா காங்கிரஸின் முக்கிய பிரமுகரான கே. நட்வர்சிங் தற்பொழுது கொழும்பு வந்துள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இவர் ராஜீவ்காந்தியின் அரசில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்தவர். இந்திய—இலங்கை ஒப்பந்த செயற்பாட்டிலும் முக்கிய பங்கு வகித்தவர். அப்போது பல தடவைகள் இவர் இங்கு வந்து சென்றிருந்தார்

இவருடன் இவரது மனைவியும் கொழும்பு வந்துள்ளார். இப்போதைய விஜயத்துக்கான காரணமெதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

# அன்னைபூபதி நினைவாக இன்று நல்லூர்ப் பகுதியில் உண்ணாவிரதம்

இன்று வியாழக்கிழமை நல்லூர் வட்டவைப் பிரதேசத்தில் அன்னைபூபதி நினைவாக காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடையாள உண்ணா விரதம் நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது

# இலவச மின்சாரத்திட்டம் தமிழகத்தில் கைவிடப்படுகிறது?

தமிழகத்தில் கருணாநிதியால் அமுலுக்கு வந்த இலவச மின்சாரத்திட்டம் நஷ்டமாக கைவிடப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அது பற்றித் தமிழக இதழ் ஒன்று பின்வருமாறு கூறுகிறது. ''எம். ஜி. ஆர் ஆட்சிக் காலத்தில் அகற்றப்பட்ட மீட்டர்கள் மீண்டும் பொருத்தப்படுகின்றன. இது எதற்கு என விவசாயிகள் கேட்டால் ''சும்மாதான்'' எவ்வளவு கரண்ட் ஆகிறது என்று பார்க்க என்று பதிலாம்.

# அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி தொண்டர்ஆசிரியர் நாளைஆராய்வர்

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் தனது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரிவாக ஆராயும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புக்கள கல்லூரியில் கூட்டம் ஒன்றினை நடத்தவுள்ளது.

சகல தொண்டர் ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மேற்படிச் சங்கத்தினர் சென்ற செவ்வாய்க்கிழமை குடாநாட்டில் பாடசாலைப் பகிஷ்கரிப்பு ஒன்றினை ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடத்தினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அதிரடியை அடுத்து இராணுவ நடமாட்டம் குறைந்தது!

பூநகரி-கல்முனை பகுதியிலும் அதனை அண்டிய கரையோரப்பகுதியிலும் இராணுவ நடமாட்டம் குறைந்துள்ளதாகவும் மீனவர்கள் இந்த கரையோரங்களிலும்தொழில் செய்யக்கூடிய நிலை தற்போது உருவாகி உள்ளதாகவும் குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இப்பகுதியில் இராணுவத்தின் எண்ணிக்கையிலும் குறைவு காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

அதேசமயம் இங்குள்ள இராணுவத்தினர் பாலைதீவுக்கடலில் தரித்துள்ள கப்பலில் இருந்து உணவு மற்றும் பொருள்களை பிளாஸ்ரிக் படகுகள் மூலம் காரைநகர் பகுதிக்கு எடுத்துச் செல்வதை அவதானிக்க முடிவதாகவும் இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்

விடுதலைப்புலிகளின் திடீர் அதிரடித்தாக்குதல்களுக்கு அஞ்சியே இப்பகுதியில் இராணுவ நடமாட்டம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 15

# பாடசாலைகளில் அமைப்புக்களை உருவாக்கக் கோரிக்கை

தமிழீழ மாணவர்களின் கல்வியை வளர்க்கும் நோக்குடன் தமிழீழத்திலுள்ள கல்விமான்களையும், ஆர்வமுள்ளோர்களையும் உள்ளடக்கிய தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

சாரணியம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கம், இலக்கிய அமைப்புக்கள், தமிழர்பேரவை, ஆங்கில மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், கணித விஞ்ஞான மன்றம், வணிகமன்றம், மாணவர் தலைவர் முறை, வகுப்பு முதல்வர் முறை, வகுப்பு மாணவர் மன்றம், மெய்வல்லுநர் பயிற்சி, உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற விளையாட்டுக்கள் மற்றும் சமய மன்றம், இசை நாடகம், நடனம், கவின் கலை மன்றங்கள் என்பன ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருத்தல் வேண்டுமென இவ் அமைப்பு பாடசாலை அதிபர்களைக் கடிதமூலம் கோரியுள்ளது. (15)

# சம்பளம்பெறுவதற்கு ஆசிரியர்களை நேரடியாகச் சமூகமளிக்க பணிப்பு

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமூகமளிக்காது 'டி' படிவம் மூலம் சம்பளத்தைப் பெறுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வேலணை கோட்டக்கல்வி அதிகாரி அறிவித்துள்ளார்.

இச் சலுகையை ஆசிரியர்கள் துஷ்பிரயோகம் செய்வதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இப்புதிய அறிவிப்பின் படி சம்பளத்தைப் பெறுவதற்கு ஆசிரியர்கள் இனிமேல் 'டி' படிவத்தை இருதடவைகள் மட்டுமே தொடர்ச்சியாகப் பயன்படுத்த முடியும். (15)

## கூட்டம்

சார்க் நாடுகளின் வறுமை ஒழிப்புக்கான சுதந்திர ஆணைக்குழு இம் மாதம் 31 ஆம் திகதி கொழும்பில் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தெ. ஆபிரிக்க கருத்துக் கணிப்பு; அதிபருக்கே வெற்றி வாய்ப்பு!

கடந்த 17 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் தீர்ப்பு அதிபர் டிகிளார்க்கின் புதிய சீர்திருத்தக் கொள்கைக்குச் சார்பாகவே அமையுமென நேற்று நண்பகல் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்னாபிரிக்காவில் சுமார் இரண்டு கோடிக்கும் அதிகமான கறுப்பர்கள் வாழ்கின்றார்கள். வெள்ளையர்கள் மட்டுமே பங்குபற்றும் இந்தக் கருத்துக் கணிப்பில் வாக்களிக்கும் தகுதியை 33 இலட்சம் வெள்ளையர்கள் பெற்றுள்ளனர்.

70 சதவீதத்திற்கும் அதிகமானோர் சீர்திருத்தக் கொள்கைக்குச் சார்பாகவே வாக்களித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகள் அதிபர் டிகிளார்க்கின் கொள்கைக்கு அங்கீகாரமளிப்பதாகவே இருக்குமெனக் கருதப்படுகின்ற அதே வேளை, கருத்துக் கணிப்புத் தனக்குப் பாதகமாக இருந்தால் தான் பதவி விலகிவிடப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# எம். ஜி. ஆரின் பெருந்தன்மையால் 1968 இல் அமைதியான மகாமகம்

சமீபத்தில் கும்பகோணத்தில் பக்தி சிரத்தையுடன் ஆரம்பமாகிப் பெரும் அனர்த்தத்துடன் முடிவடைந்த மகாமகச் சம்பவத்தையொட்டி. முன்னைய நிகழ்வு ஒன்றினை நினைவு கூர்ந்து தமிழகவார இதழ் ஒன்று பின்வருமாறு தகவல் வெளியிட்டுள்ளது;

''அது 1968 ஆம் ஆண்டு தி மு. கழகம் ஆட்சிக்கு வந்த புதிதில் ஒருமகாமகம் வந்தது. அப்போது எம் ஜி ஆர்.சிறு சேமிப்புத் துறைத் தலைவரும் கூட. ஒரு அமைச்சர் அந்தஸ்த்தைக் கொடுத்திருந்தார் அண்ணா எம் ஜி ஆர்- 'தேர்த்திருவிழா' படப்பிடிப்புக்காக அப்போது கும்பகோணம் வந்திருந்தார் அவரைக் குளத்தில் நீராட எவ்வளவோ அழைத்துப்பார்த்தனர் 'விடியற்காலை 3 மணிக்குக் குளத்தில் போய் குளித்துவிட்டு வந்து விடலாம்' என்று கூடப் படத்தின் தயாரிப்பாளர் சின்னப்பாதேவர் கூறினாராம். எம்.ஜி ஆர். மறுத்துவிட்டார். 'நான் வந்தால் மக்கள் என்னைத்தான் வேடிக்கை பார்ப்பார்கள். விழாவின்போக்கு அனாவசியமாகக் கெட்டுவிடும், வேண்டாம்' என்று சொல்லிவிட்டார். படப்பிடிப்புக்குழுவினருடன் வந்தவர்களை மாத்திரம் நீராட அனுப்பினார். அருகே உள்ள சுவாமிமலைக்கும் போகச் சொன்னார். ஆனால் எங்கேயும் போக அவர் மறுத்துவிட்டார். இது தற்போது சினிமா வட்டாரத்தில் பேசப்படும் பேச்சு.''

# ரஷ்யாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்குமாறு இராணுவத்திடம்

# தேசியவாதிகளும், கம்யூனிஸ்ட்டுக்களும் கோரிக்கை

## ஜெல்ட்சின் பதவி விலகவும் வற்புறுத்தல்

ரஷ்யாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்குமாறு தீவிர ரஷ்ய தேசியவாதிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் ரஷ்ய இராணுவத்தைக் கோரியுள்ளனர்.

அத்துடன் ரஷ்ய அதிபர் ஜெல்ட்சின் பதவி விலக வேண்டுமெனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் ரஷ்யாவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர். சுதந்திர நாடுகள் காமன்வெலத் கலைக்கப்பட்டு மீண்டும் சோவியத் யூனியன் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமெனவும் கோரியுள்ள இவர்கள் அதற்கான போராட்டங்களைத் தொடரப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இதே இவ்வாறிருக்க சோவியத்யூனியனில் இருந்து பிரிந்த இரு மாநிலங்களான அஸர்பைஜானுக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையேயான சண்டையை நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அங்கு பதட்டம் முற்றாக நீங்கவில்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## ஜெயலலிதாவும் அந்த 18 ஆம் திகதிகளும்

மகாமகத்தின்போது நிகழ்ந்த அனர்த்தம் பற்றி இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் பிந்திய தகவல்களில் சில இங்கு தரப்படுகின்றன.

இச்சம்பவத்தில் மிதிபட்டு, நெரிசலில் சிக்கி இறந்தவர்கள் 48 பேர் என்று பொலிஸ் கூறுகின்ற போதிலும் ஆஸ்பத்திரியில் பிணங்களை அடுக்கியிருக்கும் பகுதிக்கு நிருபர்கள் சென்று பார்வையிட்ட போது இறந்தவர்களின் எண்ணிக்கை அதை விட அதிகமெனத் தெரிந்தது. பிணங்கள் அடுக்கப்பட்ட கும்பகோணம் அரசு ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பகுதியின் புதிய கட்டடத்தைக் கடந்த அக்டோபர் 18 ஆம் திகதிதான் முதல்வர் திறந்து வைத்துவிட்டுப்போனார் சரியாக நான்கு மாதங்களுக்குப் பின் அதே 18 ஆம் திகதி பிணங்களால் நிரம்பி வழிந்தது.

நிருபர்கள் பொலிஸ் உயரதிகாரி ஒருவரை அணுகியபோது,

ஏதோ அம்மாவை (ஜெயலலிதாவை) நல்லபடியா அனுப்பிட்டோம்கிற திருப்தியில் இருக்கிறப்ப நீங்கவேற வந்து கழுத்தறுக்கிறீங்களே என அவர் பாய்ந்தாராம்

## இன்று கடற்றொழிலாளரின் ஆர்ப்பாட்ட எழுச்சி ஊர்வலம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு இதுவரை உதவி நிவாரணம் வழங்காத காரணத்தைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட எழுச்சி ஊர்வலம் இன்று நடைபெறவுள்ளது.

இவ்வூர்வலத்தினை மாதகல் ஒன்றிணைக்கப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களான சம்பிலத்துறை கிராமியக்கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு. மாதகல் லூர்துமேரி கிராமியக் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு, துறைமுகவிநாயகர் கிராமியக் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு. ராஜராஜேஸ்வரியம்மன் கிராமியக்கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு, மாரீசன் கூடல் கிராமியக்கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு ஆகியன இணைந்து நடாத்துகின்றன.

இன்று காலை 8 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிச்சந்தியில் இருந்து ஊர்வலமாய் ஆரம்பமாகி மானிப்பாயில் இருந்து ஊர்வலமாக வரும் கடற்றொழிலாளர் சங்கங்களுடன் சண்டிலிப்பாய் சந்தியில் ஒன்றிணைந்து பின்னர் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பணிமனைக்குச் சென்று உதவி அரசாங்க அதிபரிடம் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது மகஜர்களைக் கையளிக்க உள்ளன.

## அன்னை பூபதி நினைவாக இம்மாத நிகழ்ச்சிகள்

அன்னைபூபதி அவர்கள் நினைவாக இடம்பெறும் அடையாள உண்ணாவிரதமும் நினைவுக்கருத்தரங்குகளும் பற்றியவிவரம்-

வலிகாமம்-

19 ஆம் திகதி அரியாலை ச. ச. நிலையம் 20 ஆம் திகதி பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவில், 22 ஆம் திகதி அளவெட்டி அருணோதயக்கல்லூரி, 23 ஆம் திகதி ஆவரங்கால் சிவன்கோயில், 26 ஆம் திகதி சாவற்காடு ச. ச நிலையம்.

தீவகம்- 30 ஆம் திகதி வெற்பேலி]

வடமராட்சி-

27 ஆம் திகதி வியாபாரி மூலை பிள்ளையார் கோயில்

தென்மராட்சி-

24 ஆம் திகதி மட்டுவில் தெற்கு கேடில் மைதானம் 25 ஆம் திகதி இத்தாவில் முருகன் கோயில் 29 ஆம் திகதி கச்சாய் அம்மன் கோயில்

### வெளியீட்டு விழா

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிகஜோதி' 14 ஆவது மலர் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது. 21

### இன்று இறுதி ஆட்டம்

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் கலாநிதி ஜே: பி சி பிலிப்ஸ் ஞாபகார்த்த கிண்ணத்திற்காக நடாத்தப்பட்டு வந்த உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு லீக்கின் தலைவர் எஸ். ரி. கணநாதன் தலைமையில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் முன்னணியில் திகழும் நாவாந்துறை சென்மேரிஸ் குருநகர் பாடுமீன் கழகங்கள் கலந்துகொள்கின்றன:

தமிழீழ கடற்புலிகள் விசேட தளபதி சூசை கொடியை ஏற்றி சம்பிரதாய முறைப்படி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார். 16

## சென்ரல்-சென்ஜோன்ஸ் 88ஆவது கிரிக்கெட் போட்டி

யாழ் சென்ரல் சென்ஜோன்ஸ கல்லூரிகளுக்கு இடையிலான 88 ஆவது கிரிக்கெட் போட்டி. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஐந்து வருட காலஇடைவெளிக்குப் பின் 1990 ஆம் ஆண்டு இரு கல்லூரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போட்டி 1991 ஆம் ஆண்டு சூழ்நிலை காரணமாக இடம் பெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த 'பிக்மச்' (BIGMATCH) என்று அழைக்கப்படும் இப்போட்டி மிகவும் பழமை வாய்ந்தது.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலமாய் நடைபெற்று வரும் இக்கிரிக்கெட் போட்டி. யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளிடையே, கிரிக்கெட் ஆட்டம் அறிமுகமான காலம் தொட்டு நடைபெற்று வருகிறது.

இப்போட்டித் தொடரில் 32 போட்டிகளில் சென்ஜோன்ஸ் கல்லூரியும் 20 போட்டிகளில் யாழ் மத்திய கல்லூரியும்வெற்றி பெற்றுள்ளன, 27 போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றன.

இப்போட்டித்தொடரில் காலாகாலமாக கிரிக்கெட் ரசிகர்கள் நினைவு கூரக்கூடிய பல சாதனைகள் இடம் பெற்றுள்ளன, அவற்றுள் சில இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன,

1990 ஆண்டு இடம்பெற்ற போட்டி, ஒரு விதத்தில் இப்போட்டித் தொடரில் முக்கியமான தொன்றாகக் கருதப்படுகிறது. இப்போட்டியில்தான் சென்ஜோன்ஸ் கல்லூரி இனிங்சால் வென்று சாதனை படைத்தது 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற போட்டிகள் யாவும் வெற்றி தோல்வி இன்றியே முடிந்துள்ளன. 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் தான் சென்ஜோன்ஸ் அணிவீரன் சுரேஷ்குமார் 145 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஏற்படுத்தியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் :- 1928 ஆம் ஆண்டு 9 இலக்குகள் நஷ்டத்திற்கு சென்ஜோன்ஸ கல்லூரி பெற்ற 303 ஓட்டங்கள் 1982 ஆம் ஆண்டு 5 இலக்குகள் இழப்பிற்கு மத்திய கல்லூரி பெற்ற 309 ஓட்டங்கள், அதே ஆண்டில் மத்திய கல்லூரி வீரன் பி. பிரகலாதன் பெற்ற 125 ஓட்டங்கள். என்பன குறிப்பிடத்தக்கவை.

பந்து வீச்சு :-1910 ஆம் ஆண்டு சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வீரன் சீ. ஏ. சண்முகம் ஒரு வாட்ஸ இனிங்சில் 32 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளைச் சரித்தமை 1926 ஆம் ஆண்டு சென் ஜோன்ஸ கல்லூரி வீரன் கே. நாகலிங்கம் ஒரு இனிங்சில் 18 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை கைப்பற்றியமை. 1951 ஆம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரி வீரன் வி. சண்முகம் ஒரு இனிங்சில் 26 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை வீழ்த்தியமை 1960 ஆம் ஆண்டு சென்ஜோன்ஸ அணி வீரன் ஏ. ஐ. சோமநாதர் ஒரு இனிங்சில் 18 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை சரித்தமை என்பனவாகும்.

மேலும் சென்ஜோன்ஸ கல்லூரி அணி வீரன் யே. எம். சிங்கநாயகம் 1920 ஆம் ஆண்டு தொடக்கம் 1923 ஆம் ஆண்டு வரை 4 வருடங்கள் தொடர்ந்து அணிக்கு தலைமை தாங்கி இப்போட்டியில் கலந்து கொண்டமை ஒரு விசேட சாதனையாகும்.

கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம்

# ஆயுதங்களைவாங்கிக்குவிப்பதாக பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு!

பாகிஸ்தான் பெருமளவில் ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் உலகெங்குமிருந்து வாங்கிச் சேர்த்து வருவதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது.

அமெரிக்க அரசியல் இராணுவ விவகார துணை அமைச்சர் றிச்சார்ட் கிளார்க் இது பற்றித் தெரிவிக்கையில்; பாகிஸ்தானின் இந்த ஆயுதக் குவிப்புக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்படலாமென்றார்,

## கடும்வறட்சியின் பின் மலையகத்தில் மழை!

நீண்டநாள் வறட்சியின் பின்னர் மலையகத்தின் சில பகுதிகளில் மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

இவ்வார முற்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்தின் சில பகுதிகளில் சுமாரான மழைபெய்துள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் ஹட்டனில் மழை பெய்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## நாவற்குழியில் முப்பெருவிழா

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா முப் பெரு விழாவாக சாரணர் விழவாகவும், மாணவர் மன்றத்தின் முதலாவது சஞ்சிகையாகிய 'இளம் தளிர்' வெளியீட்டு விழாவாகவும் கலை விழாவாகவும் கல்லூரி அதிபர் செ நா. சத்தியநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கொத்தணி அதிபர் த. முத்துக்குமாரசாமி, யும் கலந்து சிறப்பித்தனர்.

கல்வயல் வே. குமாரசாமி ஆசிரியர் சி. இரகுபதி ஆசிரியரும் கவிஞருமாகிய சி. சதாசிவம், பிரதியதிபர் க. மயில்வாகனம் மன்றத் தலைவன் செல்வன் கோ. ஜீவபாலன் ஆகியோர் உட்பட பலர் நிகழ்ச்சியில் கருத்துரை வழங்கினர்.

## பிரதமரைத் தாக்கிய முதல்வரின் 'காமென்ட்'

காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாகப் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின் முதல்வர் ஜெயலலிதா நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் வெளியிட்ட கூற்று பிரதமர் நரசிம்மராவுக்குப் பிடிக்கவில்லை என்று தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இது பற்றிய பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது; "டில்லியில் காவிரிநீர் பேச்சுவார்த்தை தோல்வி என்பதை முதல்வர் ஆரம்பத்திலேயே எதிர்பார்த்திருந்தார் டில்லியில் நடந்த பிரஸ்மீட்டிங்கில் 'இங்கே நான் வந்தது வெட்டிவேலை' என்று முதல்வர் காமெண்ட் அடித்தது தான் பிரதமருக்குப் பிடிக்கவில்லை".

★ ஆர்ஜன்டீன தலைநகரில் அதிசக்திவாய்ந்த குண்டு வெடித்தது

# இஸ்ரேலிய தூதரகம் தரைமட்டம்!

# பத்துப்பேர் பலி; பலர்படுகாயம்!!

ஆர்ஜன்டீன தலைநகரில் உள்ள இஸ்ரேலிய தூதுவராலயம் சக்திவாய்ந்த குண்டொன்றினால் தகர்க்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இக்குண்டுவெடிப்பினால் இஸ்ரேலியத் தூதுவராலயத்தில் கடமையிலிருந்த 10க்கும் அதிகமான இஸ்ரேலிய அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள்; நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

ஐந்து மாடிகளைக் கொண்ட இஸ்ரேலிய தூதுவராலயக் கட்டிடம் இக் குண்டு வெடிப்பினால் இடிந்து தரைமட்டமானது.

குண்டு வெடிப்புக்கான சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து உடனடியாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

எனினும் மத அடிப்படைவாதிகளே இக் குண்டு வெடிப்புக்குக் காரணமென ஆர்ஜன்டீன அதிபர் தெரிவித்துள்ளார்.

மீட்புப்பணி தொடர்வதால் குண்டு வெடிப்பில் பலியானோரின் தொகை மேலும் அதிகமாக இருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆப். கிளர்ச்சியாளரின் றொக்கெட் தாக்குதலில் 9 பேர்பலி

ஆப்கானிஸ்தானின் கிளர்ச்சியாளர்கள் நடத்திய றொக்கெட் தாக்குதலில் 9 பேர் மரணமாகினர், பலர் காயமுற்றனர்.

காபூலில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் றொக்கெட்டுக்கள் விழுந்து வெடித்ததாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

## தமிழகத்தின் இன்றைய நிலை; உரையாடலாக இங்கு

தமிழக வார இதழ் ஒன்று மாநில நிலைபற்றி உரையாடல் பகுதியில் வெளியிட்டுள்ளவற்றில் மூன்று இங்கு தரப்படுகிறது.

திருச்சி; தில்லைநகர் பாங்க் வாசலில இருவர்......

"இப்ப உள்ளே பேசிக்கிட்டிருந்தோம் பாரு... அவன் படிக்கிற காலத்தில் என்னைப் பாத்துத்தான் பரீட்சை எழுதுவான் இப்ப பாரு, பாங்ல வேலை பார்க்கிறான்... நான் சும்மா சுத்தறேன்"

'பாவம்டா அவன்... உன்னைப் பாத்து எழுதினதால தான் அவனுக்கு இந்தவேலை கிடைச்சிருக்கு... அவன் மட்டும் ஒழுங்கா படிச்சு எழுதியிருந்தான்னா, ரிசர்வ் பாங்லேயே வேலை கிடைச்சிருக்கும் போலிருக்கே.' அப்பிடிங்களா?... அப்ப நீ நடந்துவா! நான் மட்டும் வண்டியிலே போறேன்''

□ கோவை: அலுவலக வளாகத்தில் இருவர்...

'எலே... எங்கேடா இந்தப் பக்கம்'

'அரிசி விலையைக் குறைக்கச் சொல்லி மனு கொடுக்க வந்தேன் அண்ணே...'

வெளியே பார்த்தியாடா... கல்லூரி ஆசிரியர் உண்ணாவிரதம், ஆசிரியர் கூட்டணி உண்ணாவிரதம், கல்லூரி மாணவர் உண்ணாவிரதம், தொழிலாளர் உண்ணாவிரதம், நலிவடைந்த மின் ஊழியர் உண்ணாவிரதம்... இப்படி ஏகப்பட்ட பேர் சாப்பாடு இல்லாம இருக்க ஆரம்பிச்சிட்டாங்க அரிசி விலை தன்னால குறைஞ்சிடும். போய் சினிமா பாரு போ.

□ கும்பகோணம் பாங்கூர் தர்மஜாலா அருகில...

ஏண்டி காமு... ஜெயலலிதா யாருக்கோ கிரீடம் பண்ணி வைக்கிறாளே அவ யாரு?

எத்தனை தடவை கேட்ப பாட்டி? ஃபிரெண்டு அப்படீன்னா?

ஐயே... ஏன் கத்தி மானத்த வாங்கற? அவ சிநேகிதி பாருடி அதுதானே உண்மையான சிநேகிதம்! அந்தளவுக்கு கூடப் பார்க்காம என்ன செய்யறா பாரு? நீயும் தா இருக்கியே... கூடப் பொறந்தவளோடயே தினமும் அடிச்சுண்டு...

# தமிழகத்தில் கோயில் கொள்ளைகள் அதிகரிப்பு!

தமிழகத்தில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க ஆட்சியில் கோயில் கொள்ளையர்களும் அதிகரித்து வருவதாகவும் இதனால் பக்தர்கள் மனம் வெதும்பிப் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லையில் சமீபத்தில் கோயில் கொள்ளையர் அம்மி குழவியால் சிலைகளை சுக்குநூறாக்கினர் என்ற தகவல் வெளியானது.

பின்னர் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமரைச்செல்வி புதுக்குறிச்சி என்ற ஊர்களில் நான்கு கோயில்களில் சிலைகள் தூள் தூளாக உடைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து சேரன்மகாதேவியும் தாமிரபரணிகரையோரம் சேரமன்னர்களால் கட்டப்பட்ட அம்மநாதர் கோயில் சிலைகள் தூளாகின. சிதம்பரனார் காமராஜ மாவட்டங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழகப் பொலிஸாருக்கு ஹரியானாவில் தீவிர பயிற்சி!

குண்டுகளை வெடிக்காமல் தடுப்பது பற்றி நாற்பது தமிழகப் பொலிஸாருக்குத் தற்பொழுது ஹரியானாவில் தீவிர பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதுதவிர மற்றுமொரு தமிழக உயர் பொலிஸ் அதிகாரிகள் குழுவுக்கும் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கான பயிற்சியும் ஹரியானாவில் வழங்கப்பட்டு வருவதாகத் தமிழகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

## மொஸாம்பிக் தூதுவர் கழுத்து நெரித்துக் கொலை

ஸாம்பியாவுக்கான மொஸாம்பிக் தூதுவர் லுஸாக் காஸிம் அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

லுஸாக் காஸிம் கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அவரைக் கொன்றவர்கள் அவரது வீட்டையும் சூறையாடியுள்ளனர் என்றும் ஸாம்பிய வெளிநாட்டமைச்சர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## அமைச்சரின் நேர்மையால் அவரின் பதவியே பறிபோனது

அ.தி.மு.க.வினருடன் 'ஐக்கியமாக' முடியாததாலேயே அமைச்சர் பதவியிலிருந்து முமைது ஆசிபை ஜெயலலிதா 'கழற்றி' விட்டுவிட்டார் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது; 'ஆசிப் கொஞ்சம் வித்தியாசமானவர் தான். தனது மனைவியைக் கூட அரசு காரில் ஏற அனுமதிக்க மாட்டாராம். தனது மகனை, வழக்கப்படி எப்போதும் ஸ்கூட்டரில் தான் செல்ல வேண்டும்... அரசகாரைப் பயன்படுத்தக் கூடாது' என்று சொல்வாராம் அமைச்சர் பதவி பறிபோனதும் உடனே தனது அமைச்சருக்கான குடியிருப்பைக் காலி செய்து விட்டு தனது பழைய அண்ணாநகர் வீட்டில் குடியேறினார். இப்படி விட்டிலேயே கண்டிப்புடன் இருந்தவர் கட்சிக்காரர்களுக்கு என்ன செய்திருப்பார்?''

## எவரெஸ்ற் அணி வெற்றி பெற்றது

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்பட்டுவரும் உதைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மருத்துவ பீட விளையாட்டரங்கில் இடம்பெற்ற உதைப்பந்தாட்டப்போட்டியில் 'எவறெஸ்ற்' விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணியை 5க்கு பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் வென்றது. 16

## இஸ்ரேல் பிரஜைமீது வழக்கு

இஸ்ரேல் பிரஜை ஒருவர் 456.000 ரூபா ஹோட்டல் கட்டணத்தை செலுத்தவில்லை என்ற குற்றச் சாட்டின் மீது கோட்டை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வீரவேங்கைகளின் நினைவாக நாவற்குழியில் சரணாலயம்

சிலாவத்துறை நேரடிச் சண்டையில் வீரச்சாவு அடைந்த வேங்கைகளின் நினைவாக நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சரணாலயம் 21 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான அஞ்சலி நிகழ்ச்சிகள் 21 ஆம் திகதி மாலை 5. 30 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், யாழ் மாவட்ட துணைத் தளபதி செந்தாளன், தென்மராட்சி விசேட தளபதி குணா, தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ் மாறன் தென்மராட்சி தளபதி பரணி, மகளிர் முன்னணியைச் சேர்ந்த ஆர்த்தி, யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி. தமிழீழ மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

'போர்க்குயில்' நாடகம், 'களத்தில் நின்றுவேங்கைகள்' எழுச்சிப்பாடல்கள் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ராணுவத் தளபதிக்கு எதிராக நடவடிக்கை இல்லை

இந்தியாவில் நல்ல அரசு ஏற்படுத்துவது ராணுவத்தின் பொறுப்பும் கூட என பத்திரிகைக்குப் பேட்டி வழங்கிய இந்திய ராணுவத் தலைமைத் தளபதி ரொத்திகு வெளியிட்டிருந்தார்.

ராணுவத்தளபதி ஒருவர் பத்திரிகைக்குக் கருத்து வழங்கவோ பேட்டி வழங்கவோ கூடாது எனக்கூறி நாட்டில் ராணுவத்தலைமைத் தளபதி பேட்டி வழங்கியது தவறு எனப்பாராளுமன்றத்தில் கூறப்பட்டது. இதற்குப்பதில் அளித்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் அவர்கள் ராணுவத்தலைமைத் தளபதியின் பேட்டி ஒழுங்கு விதிகளை மீறவில்லை எனவும் அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாது எனவும் கூறினார், ஆனாலும் இந்தப்பேட்டியை அவர் கொடுக்காது இருந்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பண்ணாகத்தில்

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் புலவர் நா.சிவபாதசுந்தரனாருக்கு எடுக்கும் பாராட்டு விழாவும் அவர் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை நூல் வெளியீட்டு விழாவும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பண்ணாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# உலகசுகாதார நிறுவனத்தின் உதவியுடன்

# வடக்கில் எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கை

வடபகுதியிலும் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி எய்ட்ஸ் தடுப்புப் பிரசாரம், எய்ட்ஸ் பரிசோதனை என்பன முதற்கட்டமாக வடக்கிலுள்ள முக்கிய நகரங்களில் மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்திற்கு உலக சுகாதார நிறுவனம் நிதி மற்றும் உதவிகளை வழங்கும். இப்படி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்து அணி நேற்று முதற் தோல்வியைக் கண்டது

உலகக் கோப்பை போட்டித் தொடரில் நேற்று நியூசிலாந்தில் கிறிஸ்சேச் என்ற இடத்தில் இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி நியூசிலாந்து அணியை 7 விக்கெற்றுகளால் தோற்கடித்தது இப்போட்டித் தொடரில் ஏழு ஆட்டங்களில் வெற்றிபெற்று முன்னணியில் நின்ற நியூசிலாந்து அணிபெற்ற முதலாவது தோல்வியென்பது குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணி அதன் முதல் துடுப்பாட்டத்தில் 48 2 ஓவர்களில் 166 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44 4 ஓவர்களில் 3 விக்கெற்றுகள் இழப்பிற்கு ரமேஸ் ராஜ் பெற்ற 119 ஓட்டங்கள் உட்பட 167 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

நியூசிலாந்தில் ஆக்லேண்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற இன்னொரு போட்டியில் சிம்பாவே அதனை எதிர்த்தாடிய இங்கிலாந்தை 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. சிம்பாவே அணி இப்போட்டித் தொடரில் பெற்ற ஓரேஒரு வெற்றியும் முதல்வெற்றியும் இதுதான் என்பது சுட்டிக்காட்டப்படவேண்டிய தொன்றாகும் ஸ்கோர் சிம்பாவே 134 ஓட்டங்கள் இங்கிலாந்து 125 ஓட்டங்கள்.

அவுஸதிரேலியாவில் மெல்போன் என்ற இடத்தில் இடம்பெற்ற போட்டியில் அவுஸதிரேலிய அணி மேற்கிந்தியதீவுகள் அணியை 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸதிரேலிய அணி அதன் துடுப்பாட்டத்தில் 50 ஓவர்களில் 6 விக்கற்றுகளை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது மேற்கிந்திய தீவுகள் அணி அதன் துடுப்பாட்டத்தில 42,4 ஓவர்களில சகல விக்கற்றுகளையும் இழந்து 159 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. 16

# கொக்குவில், யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் இரத்ததானம்

யாழ், ஆஸபத்திரியில இரத்தம் தேவைப்படுவதாக அறிவித்ததையடுத்து யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களும், கொக்குவில இந்துக்கலலூரி மாணவ மாணவிகளும் தாமாகவே முன்வந்து இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

களத்தில இரத்தம் சிந்தும் போராளிகளுக்கான இரத்ததானம் வழங்க தாமாகமுன்வந்த இவர்களை பாலம் பணிமனை பாராட்டியுள்ளது

★ உலகக் கோப்பை கிரிக்கெட்

# வாரஇறுதியில் நடைபெறும் அரையிறுதி ஆட்டங்கள்

உலகக் கோப்பை அரையிறுதி ஆட்டங்களில் எதிர்வரும் சனிக்கிழமை முதலாவது அரையிறுதியில் நியூசிலாந்து எதிர் பாகிஸதான் ஆட்டமும்

இரண்டாவது அரையிறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிறன்று இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா ஆட்டமும் இடம்பெறும்

★ சுதந்திரக்கட்சி எம். பி மீது

# லலித் மானநட்ட வழக்கு ஜூலை 16இல் தீர்ப்பு

கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி, சீ, வி, குணரட்ன மீது லலித் அத்துலத்முதலி தொடர்ந்த மான நட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எஹலியகொடையில 1988 செப்டம்பர் 14இல் நடைபெற்ற கூட்டத்தில பேசிய சீ, வி, குணரட்ன எம் பி அத்துலத்முதலியின் கப்பல பேரம் குறித்து பேசியதாகவும் அதனால தனக்கு மான நட்ட ஈடாக 5 மிலலியன்ரூபா தருமாறும் கோரி கக்கிசை நீதிமன்றத்தில அத்துலத்முதலி வழக்குத்தாக்கல செய்துள்ளார்

# ஆடுவளர்ப்புத்திட்டம் பெண்களுக்கு நிதியுதவி

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் ஆடு வளர்ப்புத்திட்டத்தில் கட்டப்பிராய் கலைமணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது

இந்தப் பணம் தெரிவு செய்யப்பட்ட 13 பெண்களுக்கு தலா ஒரு ஆடு வாங்குவதற்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசம்பிள்ளையினால இன்று வழங்கப்படும்

இந்தப் பணம் வழங்கும் வைபவம் இன்று கட்டப்பிராய் கலைமணி மாதர் சங்க மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு வைபவரீதியாக நடைபெறும். (06)

# கொழும்பில் நாய் கடித்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்

கொழும்பில் நாயினால கடியுண்ட யாழ் பலகலைக்கழக வர்த்தகத்துறை முதலாம் ஆண்டு மாணவி செலவி சிவநாதன் தர்மவேணி (22) நேற்று யாழ் ஆஸபத்திரியில் மரணமானார்

தெலலிப்பழையைச் சேர்ந்த இவருக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் நாய் கடித்ததாகவும் கொழும்பில் சரியான சிகிச்சையளிக்கபபடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

குளித்ததால் இவருக்கு திடீரென சுகயீனம் ஏற்படவே யாழ் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (07,43)

## வேங்கைகளுக்கு அஞ்சலி

மணலாறு கொக்குத்தொடுவாய் பகுதியில் நேற்று நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள் மூவரது புகழ் உடல்கள் நேற்று வடமராட்சிப் பகுதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன,

வீரமரணமடைந்த 1ஆ பேரில் ஞானி (அல்வாய்)) இளங்குன்றன் (அச்சுவேலி). இளம் சேரலதன் (திருமலை) ஆகியோரது புகழ் உடல்கள் நெல்லியடி, பருத்தித்துறை, அச்சுவேலியில் வைக்கப்பட்டன, 80

## கலிபர் தாக்குதல்

பூநகரி கல்முனையிலும், மண்டைதீவிலும் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் கரையோரப்பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை வேளையில் கலிபர் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு இராணுவத்தினர் குருநகர் பகுதியையும், கல்முனை இராணுவத்தினர் அரியாலை கிழக்கு கரையோர பகுதியையும் நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. 74

## பலாலியிலிருந்து ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு கட்டுவன், குரும்பசிட்டி போன்ற பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்,

இராணுவத்தினர் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர் என தெரிவிக்கப்பட்டது. 47

## பொருள்கள் இறக்கப்படுகின்றன

வல்வெட்டித்துறையில் ஊரடங்கு சட்டம் அமுலில் செய்யப்பட்டுள்ளபோதிலும் பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது தரித்துள்ள சோமாரி கப்பலிலிருந்து பொருள்கள் தினமும் தங்குதடையின்றி இறக்கப்பட்டு வருகின்றன. 10

## பர்மிய அரசுக்கு எதிர் அரசு

பர்மிய அரசு எதிர்ப்பாளர்கள் காட்டினுள் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அதேவேளை மாற்று அரசு ஒன்றையும் அமைத்துள்ளனர்

சமாதானத்திற்காக நேபல் பரிசைப் பெற்ற அவுங்சன் சூகி என்ற பெண்மணி சிறையில் இருப்பதாகவும் ஐ. நா. சபையும் உலகநாடுகளும் அவரை விடுவிக்க நெருக்கடி கொடுக்க வேண்டுமென கோரியுள்ளது

---

## பிரபாகரனுக்கு—

றும், குடியரசு தினத்தன்று அவர் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றவில்லை எனவும் குறிப்பிட்டார்.

---

## இலங்கைத் ..

இதற்கும் பண்ருட்டி பேச முற்பட்டபோது அவரின்பதில் நேரடியாக இல்லை என சபையில் சிலர் கூச்சலிட்டனர்

பண்ருட்டி பேச முற்படும் போதெல்லாம் ஜெயலலிதா குறுக்கிட்டதினால் பண்ருட்டி தொடர்ந்து பேசாது அமர்ந்து விட்டார்

இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பிற்காக தமிழக மக்களைப் பலியிட்டு பாதுகாப்பற்றவர்களாக்க முடியாது என அப்போது ஜெயலலிதா குறிப்பிட்டார்

விசர்நாய் கடித்து

# கடந்த 20 நாள்களில் மூவர் ஆஸ்பத்திரியில் மரணம்

கடந்த 20 நாள்களில் விசர் நாய்க்கடிக்குளளாகி அதற்கான தடுப்பூசி மருந்தை (ஏ. ஆர். வி) ஏற்றாததால் மூன்று பேர் மரணமானதாக ஆஸபத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நாய் கடித்ததும் உடன் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவேண்டும் எனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதார அமைச்சு வடபகுதிக்கு விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்தை அனுப்புவதில் அக்கறையின்றி இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இதேநேரம் யாழ் ஆஸபத்திரி நிர்வாகம் வேறு இடங்களில் இருந்து விசர்நாய்க் கடித் தடுப்பூசி மருந்தைப் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

# பிரிட்டன் தேர்தல் பற்றிய கொள்கை விளக்கங்கள்

பிரிட்டனில் அடுத்தமாதம் 9 ஆம் திகதி நடக்க இருக்கும் பொதுதேர்தலுக்கான தமது கொள்கை விளக்க ஏடுகளை தொழிற்கட்சியும் கொன்சவேற்றிவ் கட்சியும் வெளியிட்டுள்ளன

வருமான வரியில் இருந்து ஐரோப்பிய குடும்ப அமைப்பு பிரிட்டனின் பங்கும் பணியும் என்ன என்பது வரை பல வாக்குறுதிகளை இருகட்சிகளும் வழங்கியுள்ளன.

வருமானவரி விடயத்தில் இருகட்சிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடு இருக்கிறது. மிக உயர்ந்த ஊதியம் பெறுபவர்களுக்கு உரிய வருமானவரியை 50 சதவீதம் அதிகரிப்பது தொழிற் கட்சியின் கொள்கை குறைந்த வருமானவரி என்பது கொன்சவேற்றிவ் கட்சியின் கொள்கை.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாகவும் கொன்சவேற்றிவ் கட்சி அறிவித்துள்ளது.

● தென்னாபிரிக்க கருத்துக் கணிப்பு

# 70 சதவீத வெள்ளையர் சீர்திருத்தத்திற்கு ஆதரவு

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கு வெள்ளையர்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் வெள்ளையர்கள் சீர்திருத்தத்திற்கு தமது பெரும்பான்மை ஆதரவை தெரிவித்துள்ளனர்

15 தேர்தல் மாவட்டங்களில் நடத்தப்பட்ட தேர்தலில் 14 மாவட்டங்களில் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக 69 வீத வாக்குகள் கிடைத்துள்ளன

தீவிரவாத வெள்ளையர் நகரான பீற்றர்ஸ பேர்க்கில் மட்டுமே எதிரான வாக்குகள் அதிகம் விழுந்துள்ளன

தனது சீர் திருத்தக் கொள்கைக்கு பெரும்பான்மையான வெள்ளையர் ஆதரவு தந்தமை குறித்து கருத்து வெளியிட்ட "தென் ஆபிரிக்க ஜனாதிபதி டிகிளேக் தென் ஆபிரிக்காவின் நிற வெறி அத்தியாயம் மூடப்பட்டுவிட்டது" என்றார் (முன் வந்த செய்தி உள்ளே)

# சிங்களக் குடியேற்றத்திற்கு தேரோ கூறும் காரணம்!

நிலமற்ற எவரையும் இலங்கையின் எந்தப்பகுதியிலும் குடியமர்த்தலாம் இவ்வாறு மடிகே பன்னசிய மகாநாயக்கதேரோ குடியேற்றங்கள் தொடர்பாக தனது கருத்தை வெளியிட்டுள்ளார்

அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் வடக்கு கிழக்கில் இருந்த பல தமிழர்கள் தெற்கில் வந்து வீடமைத்து குடியேறுகின்றனர்

இதையாரும் தடுக்கவில்லை அப்படியிருக்க வடகிழக்கில் சிங்களவர் குடியேற்றப்படுவதை எப்படித் தடுக்க முடியும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது

## காமினி ஜெயசூரிய சொல்கிறார்

---

# இலங்கை சிங்கள நாடு இதைப் பிரிக்க முடியாது

இந்த நாடு சிங்களவர்களுக்குள்ள ஓரேநாடு இதுஒரு சிங்கள நாடு இதனை பிரிக்கவோ துண்டாடவோ விடமாட்டோம்

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் சிங்கள பாதுகாப்பு இயக்கத் தலைவருமான காமினி ஜெயசூரிய கேகாலையில நடைபெற்ற கூட்டம் ஒன்றில பேசுகையில கூறினார் தொடர்ந்து பேசிய அவர் தொண்டமானின் யோசனை நாட்டை பிரிப்பதற்கு சமனாகும். இதனை சகல சிங்கள மக்களும் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டும்.

கடந்த பதினொரு வருடங்களாக நடைபெறும் யுத்தத்துக்கு முடிவே இலலை வடக்கு கிழக்கில நாட்டை பாதுகாக்கச்சென்ற எமது படையினர் கொலலப்படுகின்றனர் என்றார்,

# காணாமல் போனோரின் பெற்றார் பாதயாத்திரையில்

1989 ஆம் ஆண்டு முதல் காணாமல போன பாடசாலை மாணவர்களின் பெற்றோரும் எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையில் கலந்துகொண்டனர்,

தமது பிள்ளைகளின் நிலமை பற்றி அரசு திருப்தியான பதில் தரவில்லை என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் திருவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 19-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது